DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

CC. No. 74/2019

Prosecution witness – PW.5

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு. செல்வம் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused present)

28.02.2024 – 12.45 PM

சாட்சியை நிலைய முதல் நிலைக்காவலர்–2148 அவர்கள் அடையாளம் காட்டினார்.

<u>முதல் விசாரணை</u>

1. எனக்கு சொந்த ஊர் விருதுநகர் மாவட்டம் மறைக்குளம் கிராமம். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 யைத் தெரியும். அவர் வட்டாட்சியராக இருந்து வந்தார். அவர் தான் எங்களை மீட்டவர். ஆஜர் எதிரியைத் தெரியும். அவர்தான் நாங்கள் கல் அருக்கும் வேலை செய்த சுகன்யா சேம்பரின் உரிமையாளர்.

2. எங்கள் ஊரில் கடந்த 2012ம் ஆண்டு செங்கல் சேம்பருக்கு வேலைக்கு வந்தோம். எங்கள் ஊரைச் சேர்ந்த 10 குடும்பங்கள் வேலைக்கு வந்தோம். அச்சமயத்தில் ஊரில் மழை பெய்யாததால் விவசாயம் இல்லை. சுகன்யா சேம்பரைச் சேர்ந்த கணக்குப்பிள்ளை மற்றும் கார்த்தி என்பவரும் எங்களை அபிராமத்திலுள்ள செங்கல் சூலைக்கு வேலைக்காக அழைத்து வந்தார்கள்.

3. சுமார் 6 மாதங்கள் வேலை பார்த்தோம். ஒவ்வொரு குடும்பத்திலும் சுமார் 3 நபர்கள் வீதம் தங்கி வேலை பார்த்தோம். தங்குவதற்கு சேம்பரில் இடம் கொடுத்தார்கள். நாங்கள் சமைத்து சாப்பிட்டு வந்தோம். வாரம் ஒரு முறை சம்பளம் தருவார்கள். அதைக் கொண்டு சாப்பிட்டுக் கொள்வோம். நாங்கள் வேலை செய்வதால் வரும் சம்பளமாக ரூ.3000/– வந்தால் ரூ.300/–யைக் கொடுத்துவிட்டு மீதியை நாங்கள் வாங்கிய முன்தொகைக்காக பிடித்துக் கொள்வார்கள்.

4. ஒவ்வொரு குடும்பத்திற்கும் கணவன், மனைவி ஆகியோருக்கு தலா ரூ.20,000/– வீதம் ரூ.40,000/– முன்பணமாக கொடுத்தார்கள். அதிகாலை 04.00 மணியளவில் வாட்ச்மேன் வேலைக்காக எழுப்பிவிடுவார். மாலை வரை வேலை செய்வோம்.

5. உரிமையாளரான ஆஜர் எதிரிக்கு நாங்கள் வேலை செய்யும் நேரம் குறித்து நன்கு தெரியும். உரிமையாளரும் அவ்வப்போது பார்த்து விட்டுச் செல்வார். நல்லது கெட்டது போன்ற விஷேசங்களுக்கு ஊருக்கு செல்லவேண்டும் என்றால் என் மனைவியை மட்டுமே அனுப்புவார்கள். என்னை போகவிடமாட்டார்கள்.

6. பின்னர் எங்களுடன் வேலை பார்த்து வந்த கார்த்திக் என்பவரை சரியாக வேலை பார்க்கவில்லை என்று உரிமையாளர் அடித்துவிட்டார். யாரும் சேம்பரை விட்டு வெளியே செல்லக்கூடாது என்று சேம்பரை அடைத்துவிட்டார்கள். கார்த்திக் என்பவர் தப்பிச்சென்று தகவல் சொல்லி காவல்துறையினர் மற்றும் அதிகாரிகள் வந்தார்கள்.

7. எங்களை அதிகாரிகள் திருச்சுழிக்கு அழைத்துச் சென்று விசாரித்துவிட்டு மறுநாள் ஊருக்கு அனுப்பி வைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள். நடந்த சம்பவம் குறித்துச் சொன்னேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரிலிருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. சாட்சிகளின் விசாரணையை ஒத்திவைக்க மனுத்தாக்கல் செய்யப்பட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது)

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.